நாச்சிக்குறிச்சி ஊராட்சி மன்றம்

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

அனுப்புநர்

G. கிருஷ்ணவேணி கோவிந்தராஜ்

தலைவர்

நாச்சிக்குறிச்சி ஊராட்சி

செல் : **99447 79944**

பெறுநர்

உயர்திரு R.முருகன் த.பெ.ரெங்கசாமி,

எண்.51/5, அம்மன்நகர், 7வது தெரு,

சுந்தர்நகர், கே.கே.நகர், திருச்சி - 620021

நாள் : 05.03.2024

பொருள் : மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் - நாச்சிக்குறிச்சி கிராமம், சர்வே எண் 133/1C, 2A1, 2B1A, 7A, 8A ல் 1.89 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி உத்தரவிடுவது - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
2. 16.02.2024 ஆம் தேதிய தானப் பத்திர எண்: 1029/2024
3. இணையதள விண்ணப்பம் எண்:9WZ35R6V/22984/2024 நாள் :20.02.24
4. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம் ம.வ.ந.ஊ.கி.கி (தி.மா) எண் 28/2024 திட்ட அனுமதி எண்:24/2024
5. நாச்சிக்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மானம் எண்:5044 நாள் : 05.03.2024

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் - நாச்சிக்குறிச்சி கிராமம், சர்வே எண்: 133/1C, 2A1, 2B1A, 7A, 8A ல் 1.89 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து ம.வ.ந.ஊ.இ.இ.(தி.மா)எண். 28/2024 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை-1ல் கண்டுள்ள அரசாணைக்கேற்ப தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்:24/2024 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி இணையதள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு நிபந்தனையில் கண்டுள்ள மனைப்பிரிவு சாலை மற்றும் ஊராட்சிக்கான இடம் தானப்பத்திரம் எண்:1029/2024 நாள்:16.02.2024 தேதி அன்று நாச்சிக்குறிச்சி ஊராட்சியின் தற்கால தனி அலுவலர், தலைவர் என்ற பெயரில் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் பேரில் நாச்சிக்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண்: 5044, நாள்: 05.03.2024 மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு சாலை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் ம.வ.ந.ஊ.இ.இ.(திமா) எண்.28/2024 என தெரிவித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் பார்வை-1ல் காணும் அரசாணையின்படி, மேற்படி இடத்திற்கான நிலபயன் மற்றும் மற்ற கட்டணம் 3% தொகையை மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொண்டதன் அடிப்படையிலும் மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி
நாச்சிக்குறிச்சி ஊராட்சி
மணிகண்டம் வட்டாரம்

கிருஷ்ணவேணி

தலைவர்

நாச்சிக்குறிச்சி ஊராட்சி